

கழக பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம், கோவை மாவட்டம், அன்னூர் சாமுத்திரிகா திருமண மண்டபத்தில் பொறியாளர் அணி மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி கருணா தலைமையில் மாநிலத் தலைவர் துரை.கி.சரவணன் முன்னிலையில் மாநில துணைச் செயலாளர் எஸ்.ஏ.நந்தகுமார் வரவேற்புரையில் நடைபெற்றது. மேற்கு மண்டல பொறுப்பாளர், கரூர் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, திருப்பூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் வாழ்த்துரை வழங்கினர். இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், மாநிலங்களவை குழுத்தலைவர் திருச்சி சிவா ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் பொறியாளர் அணி மாநில இணை மற்றும் துணைச் செயலாளர்கள் பொள்ளாச்சி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், வே.உமாகாந்த், இரா.நரேந்திரன், சி.பிரதீப், இரா.ப.பரமேசுகுமார், ஆர்.வி.எல்.இரவிச்சந்திரன், கலை கார்த்திகேயன், வெற்றி ஞானசேகரன், பி.அன்பழகன், எம்.பி.ராஜவர்மன், கோவை மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பொறியாளர் அணியில் உள்ள அனைவரும் முழு வீச்சில் களப்பணி செய்து

# 2026 சட்டமன்றத் தேர்தலில் குறைந்த பட்சம் 200 தொகுதிக்கு மேல் வெற்றியை உறுதி செய்ய உழைப்போம்!

## கழக பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பூர், செப். 2 –

பொறியாளர் அணியில் உள்ள அனைவரும் முழு வீச்சில் களப் பணி செய்து வருகின்ற 2026 சட்ட மன்றத் தேர்தலில் குறைந்த பட்சம் 200 தொகுதிக்கு மேல் வெற் றியை உறுதி செய்ய உழைப் போம் என்று கழக பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட நிர் வாகி கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழ கத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உத யநிதி ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலின் படி கழக பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட நிர் வாகி கள் கலந்தாய்வுக் கூட்டம் 31.08.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10.00 மணியள வில் கோவை மாவட்டம், அன்னூ ரில் கோவை to சத்தி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சாமுத்திரிகா திருமண மண்டபத் தில் பொறியாளர் அணி மாநிலச் செயலாளர், கழக செய்தி தொடர் பாளர் எஸ்.கே.பி கருணா தலை மையில் மாநிலத் தலைவர் துரை. கி.சரவணன் முன்னிலையில் மாநில துணைச் செயலாளர் எஸ். ஏ.நந்தகுமார் வரவேற்புரையில் நடைபெற்றது. மேற்கு மண்டல பொறுப்பாளர், கரூர் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, திருப்பூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார் வாழ்த்துரை வழங் கினர். இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், மாநிலங்களவை குழுத்தலைவர் திருச்சி சிவா ஆலோசனை வழங்கி சிறப்புரை யாற்றினார். இதில் பொறியாளர் அணி மாநில இணை மற்றும் துணைச் செயலா ளர்கள் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன், பொள்ளாச்சி நாடாளுமன்ற முன் னாள் உறுப்பினர் கு.சண்முகசுந்த ரம், வே.உமா காந்த், இரா.நரேந்தி ரன், சி.பிரதீப், இரா.ப.பரமே சுகுமார், ஆர்.வி.எல்.இரவிச்சந்தி ரன், கலை கார்த்திகேயன், வெற்றி ஞானசேக ரன், பி.அன்பழகன், எம்.பி.ராஜவர்மன் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர அமைப்பா ளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்ட னர். இறுதி யில் கோவை மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு நன்றியுரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 1** : தமிழகத்தில் கல்வித்துறை, சுகாதாரத்துறை, தொழில்துறை மட்டுமில்லாமல் அனைத்து துறைகளையும் முதன்மை மாநிலமாக மாற்றி அமைத்துக் கொண்டிருக்கும் குறிப்பாக பொருளாதார வளர்ச்சி யில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழ கத்தை வெற்றி பாதையில் நடத் திக் கொண்டிருக்கும் நமது திராவிட மாடல் அரசின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர் களுக்கு தமிழக மக்கள் சார்பில் இக்கூட்டத்தின் மூலம் நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறை வேற் றப்படுகிறது.

**தீர்மானம் 2** : மாநிலப் பொறி யாளர் அணியின் பொறுப்பாள ராக கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற மாநி லங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்களை நியமித் தமைக்காக கழகத் தலைவர் முதல மைச்சருக்கு இந்தக் கூட்டம் நன்றி யினைத் தெரிவித்துக் கொள் கிறது.

**தீர்மானம் 3** : கழக தலைமை யால் பொறியாளர் அணியில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக பொறுப்பபிற்கு புதிதாக நியமிக்கப்பட்டு உள்ளவர் களுக்கும் மற்றும் வரும் நாட்களில் புதிதாக நியமிக்கப்பட உள்ள நிர் வாகிகள் அனைவருக்கும் இக்கூட் டத்தின் மூலம் நெஞ்சார்ந்த வாழ்த் துக்களை தெரிவித்துக் கொள்கி றோம்.

**தீர்மானம் 4** : கழக தலைவர் அவர்களது அறிவுறுத்தலின்படி செப்டம்பர் 17 முப்பெரும் விழாவை மாநிலம் முழுவதும் உள்ள பொறியா ளர் அணி நிர்வாகிகள் பொதுமக் கள் மற்றும் மாணவர்கள் பயன்பெ றும் வகையில் நலத் திட்ட நிகழ்ச்சிகளை நடத்தி சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என் றும் வருகின்ற 17.09.2025 அன்று கரூரில் நடைபெற இருக் கும் மாபெரும் விழாவில் நமது பொறியாளர் அணியில் உள்ள அனைவரும் கலந்து கொள்வோம் என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

**தீர்மானம் 5** : உலகத்திற்கே எடுத்துக்காட்டாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக திராவிட மாடல் அரசால் செயல்படுத்தி வரும் மாபெரும் திட்டங்களான புது மைப் பெண் திட்டம், தமிழ் புதல் வன் திட்டம், நான் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களை தொடர்ந்து தற்பொழுது இந்தியாவிலேயே முதல் முதலாக மாநில கல்வி கொள்கையை உருவாக்கிய தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றப் படுகிறது.

**தீர்மானம் 6** : வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் குறைந்த பட்சம் 200 தொகுதிக்கும் மேல் வெற்றி பெற வேண்டும் என்று சூளுரைத்த தமிழ்நாடு முதலமைச் சர் மற்றும் துணை முதல்வர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்களது சூளுரையை நிறைவேற்று ம் வகையில், நமது பொறியாளர் அணியில் உள்ள அனைவரும் முழு வீச்சில் களப்பணி செய்து 200 தொகுதிக்கு மேல் வெற் றியை உறுதி செய்ய உழைப் போம் என்கின்ற முக்கியமான தீர் மானம் நிறைவேற்றப்படுகிறது.



தென்காசி மாவட்டம் சிவகிரி வட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட நெற்கட்டும் செவலில் முதல் சுதந்திரப் போராட்ட வீரர் மாமன்னர் பூலித்தேவன் அவர்களின் 310 வது பிறந்தநாள் முன்னிட்டு தமிழக அரசு சார்பில் நெற்கட்டும் செவல் மணிமண்டபத்தில் அமைந்துள்ள மாமன்னர் பூலித்தேவன் அவர்களின் திருவுருவச்சிலைக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்,நிதி,சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி சீனிவாசன், வாசு ஒன்றிய குழு தலைவர் பொன்முத்தையா பாண்டியன் உள்பட பலர் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க., பா.ம.க., அ.ம.மு.க., த.வெ.க. உள்ளிட்ட கட்சிகளில் இருந்து விலகி நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா .இராஜேந்திரன் முன்னிலையில் 600 பேர் தி.மு.க.வில் இணைந்தனர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், மாற்றுக் கட்சியினர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலையில்

# தூய்மை அருணை பணிகள்: அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

## மண்மேடு, கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு!



*திருவண்ணாமலை, செப். 2 -*

*திருவண்ணாமலையில் வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மண்மேடுகள், கால்வாய் ஆக் கிரமிப்புகளை அகற்றிட உத்தி ரவிட்டார்.*

*திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச் சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்தி ற்கு மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 4 39 ஒருங்கி ணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கி ணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவ லர்கள் என ஆயிரக் கணக்கா ணோர் மரம் நடுதல், பராமரித் தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.*

*கிரிவலப்பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்க ப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.*

*இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந் தோறும் நடத்துவதென தீர்மா னிக்கப்ப ட்டு, அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஜூலை 16 அன்று தொடங்கி வைத்தார் கள். இது மாதந்தோறும் நடை பெற்று வருகிறது.*

*31.08.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 7.00 மணிக்கு, திருவண்ணாம லை மாநகரில் நடைபெறும் தூய் மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை அமைச்ச ரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ. வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*காலை 7 மணிக்கு வார்டு எண்39, திருக்கோயிலூர் ரோடு, சாரோனை சுற்றி யுள்ளப் பகுதிகளில் மண்மேடு கள், கால்வாய் அடைப்பு, மரக் கன்றுகள் பராமரிப்பதை பார் வையிட்டு, பொதுப்பணித்து றை அமைச்சர் எ.வ.வேலு பார் வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.*

*காலை 7.30மணிக்கு, வார்டு எண்.38 திருக்கோவி லூர் ரோடு, வணிகப் பகுதிகளில் உள்ள நடைபெற்று வரும் கால்வாய் அடைப்பு,*

*காலை 7.45மணிக்கு, வார்டு எண்.21 அஜிஸ் காலனி பகுதி யில் செடிகள் நிரம்பிய புதர் கள் மற்றும் கால்வாய் தூர்வ ரும் பணியினை பார்வை யிட்டும், காலை 8.00மணிக்கு, வார்டு எண்.17 இராமலிங்க னார் தெருவில் நடைபெறும் கால்வாய் அடைப்பு தூய்மைப் பணிகள், காலை 8.15மணிக்கு, வார்டு எண்.12, கட்டபொம் மன் தெருவில், நெடுஞ்சா லைத்துறை சார்பாக கட்டப் பட்ட கால்வாய் பார்வை யிட்டு ஆய்வு செய்தார்.*

*காலை 8.30மணிக்கு, வார்டு எண்.04, பெரியார் சிலை அரு கில், கிருத்துவ தேவாலயம் அருகே நடைபெறும் வரும் தூய்மை பணி மற்றும் கால் வாய் தூர்வாரும் பணியினை பார்யிட்டு ஆய்வு செய்தார்.*

*அங்கு தூய்மை அருணை ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து, தூய்மை பணியில் ஈடுபட்டு வந்த மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுடன் தேநீர் அருந்தி அவர்களை உற் சாகப்படுத்தினார்.*

*காலை 8.45மணிக்கு, வார்டு எண்.08 அண்ணா சாலையில் நடைபெறும் தூய்மை பணி யினை பார்வையிட்டார்.*

*பின்னர் பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலை யிக்கு கீழே உள்ள சேதமடைந் திருக்கும் பீடத்தினை பார்வை யிட்டு, அதை சீரமைக்கும் பணிக்குறித்து, பொதுப்பணித் துறை அதிகாரிகளுடன் கலந் தாலோசித்தார்.*

*ஒவ்வொரு வார்டிலும் ஆய்வு செய்த அமைச்சர் எ.வ.வேலு அங்கு தூய்மை பணியில் ஈடுபடும் மாணவர் கள் மற்றும் பெண்களிடம் நலம் விசாரித்து, அவர்களை ஊக்கப்படுத்தினார்.*

*தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற் பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண் ணாதுரை.எம்.பி., ப.கார்த்தி வேல்மாறன், ப்ரியா ப.விஜய ரங்கன், இல.குணசேகரன், துணை மேயர் சு.ராஜாங்கம், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழி ல்மா றன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ. ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர் கள் ம.செந்தில், கிருஷ்ண மூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ் கே. சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புக ழேந்தி, சி.சண்முகம், பி.ஆர். நாகராஜ், கு.குமார், மண்டி. பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி. முருகன், கோபி.சங்கர், சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழு மலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம் சேட், சி.கே.சசிக்குமார், எஸ். பிரபு மற்றும் LOITL வீதி ஒருங்கி ணைப்பாளர்கள் இல.குண சேக ரன், சினம்.பெருமாள், ஆர். கே.பி.பாஸ்கர், ஜீவரேகாவி ஜயராஜ், அருணை.வெங்கட் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்கள் கலந்து கொண்டனர்.*

